புரியாணி, நூடில்ஸ், பிறைட் றைஸ், சூப் வகைகளுக்கு சிறந்த இடம்
நிப்பொன் சீன உணவகம்
326, பிரதான வீதி, (புனித சாள்ஸ் வீதி. அருகில்) யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மதிய உணவுக்கு மீன், இறைச்சி, மரக்கறி சாப்பாடுகளை சுத்தமாக புசிப்பதற்கு
நிப்பொன் சீன உணவகம்
326, பிரதான வீதி, த சாள்ஸ் வீதி. அருகில், யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 01 புதன்கிழமை (17 08 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 262

## நவீன ராடர் வசதிகளுடன் 4,000 தொன் நிறையுடைய

# பாரிய கடற்படைத் தாய்க்கப்பலும் டோரா படகும் காங்கேசன்துறையில் கடற்புலிகளால் நிர்மூலம்!

## ஊடுருவி துணிகரத் தாக்குதல்; 2 சிப்பாய்களைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 17

காங்கேசன்துறை துறைமுகத்தினுள் ஊடுருவி நேற்று அதிகாலை 12-45 மணியளவில் கடற்புலிகளின் விசேட பிரிவு நடத்திய துணிகரத் தாக்குதலில் – அங்கு கடற்பரப்பில் நிறுத்தப்பட்டிருந்த – ஸ்ரீலங்கா கடற்படையின் தலைமையகக் கட்டளைக் கப்பலும், அதற்குப்பாதுகாப்பாக நிறுத்தப்பட்டிருந்த 'டோரா' பீரங்கிப் படகும் நிர்மூலமாக்கப்பட்டன.

தாக்குதலினால் தீப்பற்றிய தாய்க் கப்பலும், டோரா படகும் எரிந்து கடலில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

மூழ்கடிக்கப்பட்ட தாய்க் கப்பல் வடபிராந்திய கடற்படையினரின் போர் நடவடிக்கைகளுக்கான மிதக்கும் தலைமைக் கட்டளை மையமாகச் செயற்பட்டு வந்தது.

வடபகுதி கடல் பிரதேசத்தில் கடற்படையின் போர் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், கட்டுப்படுத்தல் என்பவற்றுடன் போர் நடவடிக்கைகளின் போது சிறிய கப்பல்களுக்கான விநியோகங்களையும் இது மேற்கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

நாட்டின் பல பகுதிகளிலும்

## அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஊரடங்கு உத்தரவு அமுலில்

நேற்று வாக்களிப்பு முடிவுற்ற கையோடு பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தை (அவசரகாலச் சட்டத்தை) ஜனாதிபதி விஜேதுங்கா பிறப்பித்தார்.

அவசரகாலசட்ட விதிகளின் கீழ் நாட்டின் பல பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஊரடங்கு உத்தரவு குறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பு வருமாறு:-

★ கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்கள் உட்பட நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் நேற்று இரவு 9 மணிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணி வரை அது அமுலில் இருக்கும்.

★ நுவரெலியா, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, அநுராதபுரம், இரத்தினபுரி, கண்டி ஆகிய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் நேற்று இரவு 11 மணிக்கு அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. வியாழக்கிழமை காலை 6 மணிக்கு அது நீக்கப்படும்.

கண்டி, எசலபெரஹரவை தடையின்றி நடத்துவதற்காக இன்று பிற்பகல் 3 மணிக்கும் இரவு 11 மணிக்கும் இடையில் கண்டி மாநகரசபை பகுதியில் ஊரடங்கு தளர்த்தப்படும். (உ-3)

ஐ. தே. கவுக்கு வாக்களிக்கும்படி வற்புறுத்தி

## வாக்களிப்பு நிலையத்தில் புகுந்து மிரட்டிய பொலீஸார் மாட்டினர்!

### சர்வதேச தேர்தல் அவதானியிடம் நேரில் சிக்கினர்

கொழும்பு, ஓக. 17

மொனறாகலை மாவட்டத்தில் சந்தகிரிய, புப்பாறை, மொனறாகலை, திம்பிரிய, அலஹர ஆகிய இடங்களில் அமைந்த வாக்களிப்பு நிலையங்களினுள் நேற்று பிபிலை மற்றும் மெதகம பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் திடீரெனப் புகுந்து அங்கு நின்ற வாக்காளர்களை மிரட்டினர் என்றும்—

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்குமாறு வாக்காளர்களை அவர்கள் அச்சுறுத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தை அம்மாவட்டத்தில் வாக்களிப்பைக் கண்காணிக்கச் சென்ற - பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த தேர்தல் அவதானி — நேரடியாகக் கண்டு கொண்டார்.

உடனே அவர் இவ்விஷயத்தை மொனறாகலை சிரேஷ்ட பொலீஸ் அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார் என்றும்

அதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட இரு பொலீஸ் அதிகாரிகளையும் வாக்களிப்பு முடிவடையும் வரை பொலீஸ் நிலையங்களை விட்டு வெளியேறக் கூடாது என்று பொலீஸ் அதிபர் தடைவிதித்தார் என்றும் ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (உ-எ-6)

## வாக்கு பெட்டிகள் உடைத்து வாக்குகள் திணிக்கப்பட்டன

### ஐ. தே. கவினரின் அத்துமீறல்

கொழும்பு, ஓக. 17

நேற்று வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்குப் பெட்டிகள் — வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட சமயம் — ஆளும் கட்சி ஆதரவாளர்கள் அவற்றை உடைத்து அவற்றினுள் வாக்குகளைத் திணித்த சம்பவங்கள் சில இடம்பெற்றனதாக, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடைபெறுவதை உறுதி செய்யும் அமைப்புக்கு முறையிடப்பட்டுள்ளது.

அமைப்பின் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி பி.பி.ஸியின் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி இத்தகவலை வெளியிட்டார்.

வாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டதாகவும் ஆள்மாறாட்டம் இடம்பெற்றதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் அமைப்பின் அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்தார். (உ-எ)

வலிகாமம் கிழக்கு, வடமராட்சி பகுதிகளில் ஷெல் வீச்சு:

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட அறுவர் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 17

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று அதிகாலை 1-30 மணி முதல் காலை 7 மணி வரை வலிகாமம் கிழக்கு மற்றும் வடமராட்சிப் பகுதிகள் மீது இடைவிடாது நடத்தப்பட்ட கொடூர ஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஆறு பேர் பலியாகினர்! ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, புத்தூர், நவக்கிரி, இடைக்காடு, தம்பாலை மற்றும் வல்லை வெளி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, ஊரிக்காடு ஆகிய பகுதிகளிலேயே சுமார் நூறு வரையான ஷெல்கள் விழுந்து வெடித்தன.

அச்சுவேலி, பத்தமேனி, பாரதி வீதி, வெள்ளைவாய்க்கால் பகுதியில் வீடொன்றில் விழுந்து வெடித்த ஷெல்லினால் திருமதி தேசிங்கம் செல்வமணி (வயது 48) அவரது பிள்ளைகளான தேசிங்கம் சுபாஸ்ரீ (வயது 29), தேசிங்கம் ஸ்ரீஸ்கந்தராசா (வயது 18) மற்றும் அவர்களது [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வன்முறைகளுக்கு மத்தியில் 75வீதமானோர் வாக்களிப்பு

### மு. காங்கிரஸ் ஆதரவாளர்கள் இருவர் கொலை

கொழும்பு ஓக. 17

சம்மாந்துறையில் நேற்று முன்தினம் இரவு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் இருவர் கொலை செய்யப்பட்டனர். (உ-3)

### பிபிலையில் தாக்குதல்

கொழும்பு ஓக. 17

நேற்று பிபிலை நகரில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அலுவலகத்தை பஜெரோ ஜீப்பில் வந்த சிலர் தாக்கிச் சேதப்படுத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது. அலுவலகத்தில் இருந்த சிலர் காயமடைந்தனர் [உ-எ-6]

### மாத்தளையிலும் வன்செயல்கள்

கொழும்பு, ஓக. 17

மாத்தளையிலும் தேர்தல் வன்செயல்கள் சில இடம்பெற்றன. சிலர் காயமடைந்தனர். (உ-3)

### மலையகத்தில் கலவரம் கார்கள் எரிப்பு

கொழும்பு ஓக. 17

வாக்களிப்பு தினமான நேற்று மலையகத்தில் இடம்பெற்ற சம்பவங்களின் போது ஐம்பதுக்கும் மேற்பட்ட வாகனங்கள் எரிக்கப்பட்டதாகவும், கலவரங்களில் பலர் காயமுற்றதாகவும் அறிவிக்கப்பட்டது. வன்செயல்களில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டனர். (உ)

### பாதைகள் மூடப்பட்டன

கொழும்பு, ஓக. 17

கொழும்பின் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதம தலைவர் வீட்டு இல்லங்களுக்குச் செல்லும் பாதைகள் யாவும் நேற்று தடைசெய்யப்பட்டிருந்தன.

கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வீதிக்கு வீதி அனைத்து இடங்களிலும் [illegible] தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கொழும்பில் தீவிர பாதுகாப்பு

கொழும்பு, ஒகஸ்ட் 17

ஸ்ரீலங்காவின் பத்தாவது நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான தேர்தலின் வாக்களிப்பு நேற்று பரவலான வன்முறைச் சம்பவங்களுக்கு மத்தியில் இடம்பெற்றது.

தெற்கில் 75 சதவீதமான பொதுமக்கள் சுறுசுறுப்புடன் திரண்டு வாக்களித்ததாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

நாடு முழுவதிலும் 80 ஆயிரம் பொலீஸாரும் அவர்களுடன் சேர்ந்து முப்படையினரும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டிருக்க வாக்களிப்பு நேற்று இடம்பெற்றது.

நேற்று மதியம் அளவிலேயே 55 வீதமானோர் தமது வாக்குகளைப் பதிவு செய்திருந்தனர்.

கிராமப் பகுதிகளில் வாக்களிப்பு விகிதாசாரம் 75 வீதத்துக்கு அதிகமாக இருந்தது.

வாக்களிப்பில் வாக்காளர் காட்டிய ஆர்வத்தைப் பார்த்தால், வெற்றியீட்டும் கட்சி தெளிவான பெரும்பான்மை வைப் பெறும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (உ-எ-6 3)

## வாக்களிப்பு நிலையத்தினுள் புகுந்து அமைச்சர் சூடு!

### பெஸ்டலின் அடாவடித்தனம்

அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா நேற்றுக் காலை வென்னப்புவ பகுதியில் உள்ள சில வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று தம்மிடமிருந்த பிஸ்டலை எடுத்து ஆகாயத்தை நோக்கி சுட்டபடி ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கும்படி வாக்காளர்களை மிரட்டியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் முன்னாள் எம்.பியான மில்ரோய் பெர்னாண்டோ இதனை 'வெரித்தாஸ்'' சிங்கள சேவைக்குத் தெரிவித்தார். (உ-எ-6)

## தேர்தல் வன்செயல்களுக்கு திங்கள் இரவு ஐவர் பலி!

கொழும்பு. ஓக 17

கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு இடையே ஏற்பட்ட வன்செயல்களில் — வாக்களிப்புக்கு முதல் நாளான — கடந்த திங்கட்கிழமை இரவு மட்டும் 5 பேர் கொலைப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுடன் சேர்த்து தேர்தல் வன்செயல்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்தது. (உ-எ-6)

## தபால மூல வாக்களிப்பு; பொ. ஐ.மு. முன்னணியில

தபால் மூல வாக்களிப்பு முடிவுகள் நேற்றிரவு 11.30 மணிக்கு வெளியாகத் தொடங்கின.

அடுத்தடுத்து வெளியான சில முடிவுகளின்படி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியே முன்னிடங்களைப் பெற்றிருந்தது.

தபால் மூல வாக்களிப்பில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு அதிக எண்ணிக்கையான வாக்குகள் கிடைத்திருப்பது—

தேர்தலில் அம் முன்னணி வெற்றி வாய்ப்பை பெறும் என்பதை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (உ)

### வாக்களிப்பு காலியில் தாமதம்

கொழும்பு, ஓக. 17

காலி மாவட்டத்தில் வாக்களிப்பு தாமதமாகவே நேற்று ஆரம்பமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மொனராகலையில் சிறுசிறு அசம்பாவிதங்கள் இடம்பெற்றன. (உ-3)

### கருத்துக் கூற தமிழர்கள் மறுப்பு

கொழும்பு, ஓக. 17

கொழும்பில் வாக்களிக்கச் சென்ற தமிழர்கள் பலர் தமது கருத்துக்களை வெளியிடவோ பேசவோ மறுத்து விட்டனர். அச்சம் காரணமாக அவர்கள் பேச மறுத்ததாக கொழும்பிலிருந்து பி.பி.ஸி. செய்தியாளர் ஆனந்தி தெரிவித்தார்.

எனினும் சிங்கள வாக்காளர்கள் வாக்களிப்பின் பின்னர் துணிந்து கருத்து வெளியிட்டனர் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

### காங்கேசனில் இருந்து 'ருகுணு' வந்தது

யாழ்ப்பாணம், ஓக. 17

காங்கேசன் துறையில் தரித்து நின்ற ''ருகுணு'' கப்பல் நேற்றுக் காலை வழமை போல் பருத்தித்துறைக்கு வந்துமாலை திரும்பிப் முடித்துவிட்டு மாலையில் திருகோணமலைக்குப் புறப்பட்டுச் சென்றது.

இக்கப்பல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை 950 மெற்றிக் தொன் மாவுடன் பருத்தித்துறைக்கு வந்திருந்தது தெரிந்ததே. (உ-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## SLAS

SLAS பரீட்சைக்குரிய நுண்ணறிவு, இரகிதம், எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆக்கியோன்: கலாநிதி. க. குணராசா. (32400)

## உற்சவகால விற்பனை

இந்திய, இலங்கை நாவல்கள் தொகையாகவும், சில்லறைக்கும், சிவம் நீதிக் கதைகள், 1, 2, 3, 4, 5, 6 பாகம் புதியவை. சமய புராணப் புத்தகங்கள், இந்திய சஞ்சிகைகள் விற்று முடிப்பதற்கான மலிவு விலையில் ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். [சி-8678]

## மாட்டெரு

மாட்டெரு விற்பனைக்குண்டு. தொடர்பு: 525/2, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/8894)

## தேவை

தமிழில் எழுதி, பில் போட்டு புடைவை வியாபாரம் செய்யக்கூடிய ஒரு பெண்பிள்ளை நேரில் வரவும். த. சங்கரப் பிள்ளை அன்சன்ஸ், 21, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (32409)

'சங்கீத' பாலர் பாடசாலைக்கு (கொக்குவில்) பயிற்றப்பட்ட பாலர் ஆசிரியை உடன் தேவை. தகுதி உடையவர் சான்றிதழ்களுடன் 20-08-94 முற்பகல் 10 மணிக்கு நேரில்சமுகந்தரவும். நிர்வாகி, 163, கே. கே. எஸ். றோட். கொக்குவில். (32415)

## பாலர் ஆசிரியராக

பயிற்சி விரைவில் — கல்வித் தகைமை ஜி. சி. ஈ. சாதாரண தரம் சனி, ஞாயிறு நேரில் வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி, 78, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (32386)

## மாணவர்களுக்கு

இலங்கை அரசியல் ஆக்கம்: அம்பலவாணர் சிவராசா, உயர்தர கணக்கியல் - I, வர்த்தகமும் நிதியும் ஆண்டு 9, 10, 11 ஆக்கம்: வீ. சுந்தரேஸ்வரன். விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-8852]

## ஆனந்தம் சீயாக்காய்

பேன், சொடுகு வராது பேண வேண்டிய மூலிகையுடன் சீயாக்காய் சேர்ந்து சித்த மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பெற்றது ஆனந்தம் சீயாக்காய் பவுடர். கேட்டு வாங்கி பயன் பெறவும். (சி-8647)

## ஜோதிட விஞ்ஞானம்

(மகராசி) சந்திமீனாவின் ஜாதகத்தில் கடகலக்கினத்திற்கு 10ஆம் வீட்டில் வெள்ளி, செவ்வாயுடன் யோகபலமடைகின்றது. தற்போது நடக்கும் சனி தெசையில் / வெள்ளிபுத்தி சந்திரிகாவை பிரதமராக்கும். ஐப்பசி வியாழ மாற்றம் ஜனாதிபதியாக்கும். (சத்யா - கட்டுடை) [32437]

கன்விராசி, அத்த நட்சத்திரத்தில் பிறந்த ஸ்ரீமாவோ, விஜேயதுங்கா இருவருக்கு 11-11-94 ஜனாதிபதியாகும் யோகங்கள் அஸ்தமிக்கின்றன. சந்திரிகாவே ஜனாதிபதியாவார். ''சத்யா'' — கட்டுடை. (32428)

## வாடகைக்கு

சோமசுந்தரம் கடை தளபாடங்களுடன் வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு: இல. 315, நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (32422)

## மணிக்கூடுகள் தேவை

உதிரிப்பாகங்களுக்காக பாவித்த நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-8686)

## மணமகன் தேவை

நற்பண்புள்ள சிரசபாலம் குறைந்த 28 வயது பட்டதாரி ஆசிரியைக்கு 34 வயதிற்குட்பட்ட இந்தப் பண்புள்ள பட்டதாரி ஆசிரியர் தேவை. முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 946. மே/பா. உதயன்பணிமனை, யாழ்ப்பாணம். (7701)

## SPOKEN ENGLISH

Spoken English with Grammar கற்பிக்கப்படுகிறது. V. N Kandasamy A. I B. PartI London) Inter(London) Dip in-English 87, திருநெல்வேலி றோட், ரயில் கடவைக்கு சமீபமாக கொக்குவில் (7703)

## மனைப் பொருளியல்

1995/96 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்கான மனைப் பொருளியல் (உணவும், போசணையும்) வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. தொடர்பு முகவரி: 88, பலாலி சாலை, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். (32399)

## திருமண சேவை

வெளிநாடு உள்நாடு அரச உத்தியோகம், டாக்டர், என்ஜினியர், அக்கவுண்டன், ஆசிரியர், ஆசிரியை ஜாதகம் எம்மிடம் உண்டு. முழுவிவரங்களுடன் ஜாதகத்துடனும் தொடர்பு கொள்க. ''அபிராமி'' துர்க்காதேவி தேவஸ்தான வீதி, சாவகச்சேரி. (32412)

## மணமகன் தேவை

கௌரவமான குடும்பப் பெற்றோர் யாழ். இந்துமத, செவ்வாய்க் குற்றமற்ற, சுவாதி நட்சத்திரம், வயது35, பொது நிறமுடைய நற்பண்புள்ள கலைப்பட்டதாரி ஆசிரியைக்கு இலங்கையில் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் நற்பண்புள்ள 40 வயதிற்கு உட்பட்ட மணமகனை எதிர்பார்க்கின்றனர். முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்! இல. 681, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (32405)

## சுட்டுக்கொலை

கொழும்பு, ஓக. 17

வவுனியாவில் கடந்த வியாழக்கிழமை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்:

கிளிநொச்சியைச் சேர்ந்த இராசையா இராசதுரை (38 வயது) என்ற ஹொறிச் சாரதியான இவரின் சடலம் வவுனிக்குளம் ஹொறவப் பொத்தானை வீதியில்இருந்து மீட்கப்பட்டுள்ளது. (உ-3)

வெளிவந்துவிட்டது

மாருதம்

சஞ்சிகை: 07

[32417]

---

எதற்காக காத்திருக்கின்றீர்கள்............?

# கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள்

## ஆரம்பம்:

வார நாள் வகுப்புகள் **02-09-1994** வார இறுதி நாள் வகுப்புகள் **03-09-1994**

| | |
|---|---|
| For Beginners:<br>DIPLOMA IN COMPUTER PROGRAMMING<br>(Quick BASIC dBASE III+. COBOL LOTUS 123) | 08 மாதங்கள் |
| For Beginners:<br>INTRODUCTION TO COMPUTER AND BASIC LANGUAGE<br>(Quick BASIC/GW BASIC/BBG BASIC | 04 மாதங்கள் |
| Programming Languages<br>PASCAL<br>COBOL<br>C | 04 மாதங்கள்<br>03 மாதங்கள்<br>04 மாதங்கள் |
| DATA BASE MANAGEMENT SYSTEM<br>dBASE III+ | 04 மாதங்கள் |
| SPREAD SHEET PROCESSING<br>LOTUS 1 2 3 | 03 மாதங்கள் |
| WORD PROCESSING<br>WORD STAR | 03 மாதங்கள் |
| COMPUTER AWARENESS COURSE<br>Practical Training for Computer Operators | 06 மாதங்கள் |

★ கம்பியூட்டர் உலகில் முக்கியத்துவம் வாய்ந்த QBASIC (QUICK BASIC) யாழ்ப்பாணத்தில் முதல் முதலில் எமது நிறுவனத்திலேயே ஆரம்பிக்கப்படுகின்றது.

★ கூடிய செய்முறைப் பயிற்சியும், தவணை முறைக் கட்டண வசதியும்

★ மாணவர்களின் வசதிக்கு ஏற்ப தனி/குழு வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

★ சிறந்த மாணவர்களுக்கு மூன்று மாத காலம் இலவச உள்ளகப் பயிற்சி அளிக்கப்படும்.

★ வேலை பார்ப்போரின் நலன் கருதி மாலை 6-00 — 8 00 வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

★ போதிய மாணவர்கள் வகுப்புக்களில் சேர்ந்து கொள்ளும் பட்சத்திலேயே குறிப்பிட்ட பாடநெறிகள் ஆரம்பிக்கப்படும்.

தொடர்பு கொள்க;

வட இலங்கை தொழில் நுட்பக்கல்லூரி

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14 ST. PETER'S LANE, JAFFNA. [சி-8892]

---

உடுவில் மகளிர் கல்லூரி

பட்டப்படிப்புகள் பிரிவு

# G. A. Q. - 95

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

விரிவுரைகள்

ஆரம்பம்: **20 - 08 - 94**

சனி 3மணி

★ பேராதனைப் பல்கலைக்கழக G A. Q. 95 விரிவுரைகள் நடைபெறுகின்றன.

★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக B A. (Part I), B A. (Part II) விரிவுரைகள் நடைபெறுகின்றன.

(சி/8889] -பதிவாளர்.

---

எக்காளத்தொனி

பூரண சுவிசேஷ சபை

கொன்வென்ஷன் • 1994

விழித்திருங்கள், விசுவாசத்தில் நிலைத்திருங்கள் 1 கொரி. 16-13

ஆவணி 18 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை தெய்வீக சுகமளிக்கும் ஆராதனை

இடம்: எக்காளத் தொனி சபை
இல. 21, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்

காலம்: 1994 ஆம் ஆண்டு ஆவணி 18 ஆம் திகதி முதல் ஆவணி 20 ஆம் திகதி வரை

நேரம்: மாலை 4-00 மணி தொடக்கம்
மாலை 6 00 மணி வரை

வியாதியஸ்தர்கள் சுகமடைய ஜெபிக்கப்படும்.

✻ பிரவேசம் — இலவசம்

[324_4]

---

# 15 - 08 - 1994 ஆம் திகதி கடந்து விட்டதே என கவலை கொள்ளாதீர்கள்!

எம் அன்பார்ந்த மாணவர்களே!!
உங்களுக்காகவே ..............................
உங்கள் வசதி கருதி
**22 - 08 - 1994** வரை
நீடிக்கப்பட்டுள்ளது!

"தமிழீழத்தினை தெரிந்து கொள்ளுங்கள்"

வினா-விடைப் போட்டியில் பங்கு கொள்வதற்கான விண்ணப்ப முடிவு திகதி மாணவர்களின் வசதி கருதி 22 — 08 — 1994 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உட்கட்டுமானப் பகுதி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

இல. 10, செம்பியன் லேன்,
கொக்குவில்.

தமிழீழத்தை தெரிந்து கொண்டு நீடித்த கால எல்லையினுள் நீங்களும் பிரவேசித்து தெரிந்ததை எழுதி அறிவுடன் கூடவே ஒரு பவுண் தங்கப் பதக்கத்தை உறுதி செய்து கொள்ளுங்கள்.

[சி 8884]

---

# பிறந்த தினத்தில் நினைவு கூருகின்றோம்



மலர்வு 17 — 08 — 1976

உதிர்வு 08 — 05 — 1994

## செல்வி தனலக்சுமி மாரிமுத்து (தனா)

பாசமுடன் பறந்து திரிந்தாய் ...... !
நேசமுடன் உறவாடினாய் ...... !
உறுதியுடன் உழைத்தாய் ...... !
கண்ணீரை விடையாக்கி எம்மைப் பிரிந்தாய் !

உமது பிறந்த நாளில் நினைவு கூரும்

குடும்பத்தினர்

இலக்., நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (32435)

---

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடக்கும் நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆறாம் நாளான இன்று ஆலயச் சுற்றாடலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு!

நாவலர் மணிமண்டப முன்றிலில் தெய்வீக இசையரங்கு

மாலை 6 மணிமுதல் 8-30 மணி வரை சத்திதேவி சிவகுமார், மோகனாம்பிகை கணேசன் ஆகியோர் பாட்டு.

மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில்,

மாலை 5-30 மணிக்கு சம்பூர்ணராமாயணம் தெய்வீக இசைப் பேருரை பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா.

நல்லை ஆதீனத்தில்

மாலை 6 மணி முதல் 7 வரை பிரசங்க பூஷணம் நடேசன் சிவசண்முகமூர்த்தியின் கந்தரனுபூதி தொடர் இசைப் பேருரை.

(க-111-17)

---

மாதகல்

## சென். தோமஸ் விளையாட்டுக்கழக பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 21-08-1994 ஞாயிற்றுக்கிழமை அன்று மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய முன்றிலில் காலை 10. 30 மணிக்கு நடைபெறும். கழக நிர்வாகிகள், அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

[32431] செயலாளர்

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 18 — 02 — 1949

உதிர்வு 09 — 08 — 1992

## அமரர் செல்லத்துரை தேவராஜா

(யூட்)

(ஸ்ரீமுருகன் மெடிக்கல் ஸ்ரோஸ் உரிமையாளர், மூளாய்)

திதி: 17 – 08 – 1994

அன்பின் சிகரமே. அன்பின் தெய்வமே! நீங்கள் மறைந்து இரண்டு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் மறையவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பின் பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள், சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்;

மூளாய் சந்தையடி,
தொல்புரம், சுழிபுரம். (7704)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 30 — 12 — 1915

மறைவு: 18 — 07 — 1994

## அமரர் தியாகர் சின்னத்தம்பி

(மாதகல்)

எங்கள் உயிரே எங்கள் ஐயா! ஒன்றென்ன ஓராயிரம் மாதம் சென்றாலும் அகலாது உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு. அன்பான மனமும், பண்பான பழக்கமும் குறிப்பறிந்து செய்யும் குணமும் நோய் வாய்ப்பட்டிருந்தாலும் ஓய்வெடுக்காமல் தன்னால் முடிந்தமட்டும் வேலை செய்யும் சிறப்பான செயலும்;

மாதம் ஒன்று சென்றும் மறையவில்லை ஐயா!
கனவிலும், நனவிலும் காணுமிடமெல்லாம்
கண்ணிலும், கருத்திலும் நிறைந்திருக்கும்
எங்கள் ஐயா!
இன்னும் சில காலம் வாழ்ந்திருக்கக் கூடாதா
காலனவன் கண்பட்டு கடுகதியாய் சென்றதென்ன?
விநாயகர் பாதத்தில் வீற்றிருக்கச் சென்றீரோ
இறைவன் அவன் பாதத்தில் ஆனந்தமாய்
அமர்ந்திருக்க
அனுதினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

1994 07-18 அன்று இறைபதமடைந்த எமது அருமைத் தந்தையாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் இன்று 31ஆம் நாள் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளில் பங்கு கொள்ளும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சி. இராசரத்தினம்
(மகன்)

தபாற்கந்தோர் முன்பாக
பொன்னாலை றோட்,
மானிப்பாய். (32365)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## தாச்சியிலிருந்து அடுப்புக்குள்?

ஸ்ரீலங்காவின் பத்தாவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் திட்டமிட்டவாறு நேற்று நடைபெற்றது. வாக்களிப்புச் சுறுசுறுப்பாகவும், விறுவிறுப்பாகவும் இடம் பெற்றதாகவும், வாக்காளர்கள் தமக்கு விருப்பமான கட்சியையும், வேட்பாளர்களையும் தெரிவு செய்வதில் ஆர்வம் காட்டியதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

பொதுத் தேர்தலின் வெற்றிக்கொடி எந்தப்பக்கம் பறக்கப்போகிறது என்பது இப்பத்தி எழுதப்படும் வரை தெளிவாகத் தெரியவில்லை. அனேகமாக எந்தக்கட்சி அதிக ஆசன பலத்துடன் வெற்றி பெறப்போகிறது என்பது இன்றைய தினமே தெரிய வரும்.

தேர்தல் முடிவு என்ன, யார் ஆட்சி அமைக்கப்போகிறார்கள் என்பனவற்றுக்கான விடைகள் ஸ்ரீலங்காவின் அரசியல் வரலாற்றில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும் என்று பலரும் எதிர் பார்க்கின்றனர்.

ஆயின் முடிவுகள், பொதுசன ஐக்கிய முன்னணி தொங்கு நாடாளுமன்றம் ஒன்றை நிறுவக் கூடியதாக அமையின், அதனால் எழக்கூடிய பல அரசமைப்புச் சிக்கல்கள் காரணமாக அரசியல் நெருக்கடி ஒன்று தெற்கில் தோன்றும் சாத்தியம் மிக நிறையவும் உண்டு.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், சட்டமியற்றும் அதிகாரம் கொண்ட ஆளுங்கட்சி எதிரணியாகவும் இருக்கும் பட்சத்தில் நாட்டின் ஆட்சி நிர்வாகம் சீராக அமையமாட்டாது என்பது வெளிப்படையானது.

இரு சாராருக்கும் இடையில் எப்போதும் முறுகல் நிலை உண்டாகி எதிரும் புதிருமாகச் செயற்படும் போது, நாட்டின் ஆட்சித்துறை ஆட்டம் காணவே செய்யும். அத்தகைய நிலை தோன்றும் பட்சத்தில், நேற்று நடந்த தேர்தல், சிங்கள மக்களை தாச்சியில் இருந்து அடுப்புக்குள் தள்ளிவிட்டதாகிவிடும்!

பொதுசன ஐக்கிய முன்னணி வெல்லும் பட்சத்தில், விஜேதுங்கா மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளித்து, தமது பதவியிலிருந்து நீங்கிச் செல்வதே கனவான் தனம்.

ஆனால் அவரது பேச்சுக்கள் அத்தகைய ஒரு சாத்தியத்தைப் புலப்படுத்தவில்லை. பொது அபிப்பிராயத்துக்குப் பயந்து அவர் அரசமைப்பு நெருக்கடிகள் உருவாகாமல் தவிர்க்க வேண்டும் என்று எண்ணினாலும் கூட —

அவரைச் சூழ உள்ளவர்கள் அதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள். ஜனாதிபதியை பதவியில் தொடரச் செய்தால் இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்து தாம் ஆட்சி நடத்தலாம் என்ற திட்டம் ஐ.தே.கவினரிடம் உண்டு. முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னாவை பாதுகாப்பு ஆலோசகர் என்ற போர்வையில் இங்கு வரவழைத்திருப்பதன் பின்னணி அதுவென்றே நம்பலாம்.

ஜனாதிபதி விஜேதுங்கா திடீரென தமது மாளிகையில் சிறிய வானொலி நிலையம் ஒன்றை அமைத்திருப்பதும் மாளிகையைச் சுற்றி இரும்பு வேலி அமைத்திருப்பதும் மக்கள் தீர்ப்புக்கு எதிராகச் செயற்படத் துணிந்துவிட்டார் என்பதற்கான அறிகுறிகளாகவே நோக்கப்படுகின்றன.

சர்வாதிகாரமான முடிவு ஒன்றுக்கு அவர் வரும் பட்சத்தில், பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் ஜனாதிபதி மாளிகையைச் சூழ்ந்து தாக்குவதும், படைகள் எதிர்த் தாக்குதல் நடத்துவதும் அதன் விளைவாக தெற்கில் சிவில் யுத்தம் ஒன்று வெடிப்பதும் நடக்கக் கூடிய சம்பவங்களாகவே கருதப்படுகின்றன.

ஆகையால், தேர்தல் முடிவுகள் நாளை முற்றாக வெளிவந்தபின்னர், அரசமைப்பு நெருக்கடி ஊடாக தெற்கில் என்னதான் நடக்கப்போகிறது என்பதே அங்குள்ளவர்களின் மனங்களை உலுக்கும் பெரும் கேள்வியாகி நிற்கிறது!

## நட்சத்திர ஹோட்டல்களில் உள்ளூர் பிரமுகர்கள்!

கொழும்பு, ஓக. 17

வாக்களிப்புக்குப் பின்னர் கொழும்பில் வன்செயல்கள் வெடிக்கலாம் என்ற அச்சத்தில் பல உள்ளூர்ப் பிரமுகர்கள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் அறைகளைப் பதிவுசெய்து தங்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டார் தமது இலங்கைப் பயணங்களை ரத்து செய்து விட்டனர் என்றும்—

அதனால் கொழும்பு ஹோட்டல்களில் பல அறைகள் காலியாக உள்ளன என்றும்—

அந்த அறைகளை உள்ளூர்ப் பிரமுகர்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்றும் தாஜ் சமுத்ரா ஹோட்டல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-எ)

## 95 மார்ச்சில் மீண்டும் தேர்தல்

### சோதிடர் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 17

நேற்று நடந்த பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சிறிய பெரும்பான்மையுடன் கூடுதல் ஆசனங்களைப் பெறும் என்றும்—

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியே அரசாங்கத்தை அமைக்கும் என்றும் சுகததாஸ ஜயசேகரா என்ற சோதிடர் ஆருடம் வெளியிட்டு உள்ளார்.

இதன் காரணமாக நாடாளுமன்ற அரசியலில் பாரிய பிரச்சினைகள் ஏற்படும் அல்லது இவ்வாண்டு டிசம்பரில் அல்லது 1995 ஜனவரியில் நாடாளுமன்றம் கலைக்கப்படும். இன்னொரு நாடாளுமன்றத் தேர்தல் 1995 மார்ச்சில் நடத்தப்படும் — என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

## தேர்தல் முடிவு ஜனாதிபதிக்கு நெருக்கடியை ஏற்படுத்துமா?

### கரண்டி தமது கையில் தான் என்கிறார்

நேற்று நடந்த பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டும் பட்சத்தில் ஜனாதிபதி விஜேதுங்கா எவ்வாறு செயற்படப் போகின்றார்?

நாட்டின் அரசியல் வட்டாரங்களில் இக்கேள்வியே இன்று எழுந்துள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதி எடுக்கக்கூடிய நிலைப்பாடுகளை அடைந்தவாறு "சண்டே டைம்ஸ்" வெளியிட்டிருக்கிறது.

*முதலாவது நிலைப்பாடு*

ஜனாதிபதி விஜேதுங்க பதவி விலகி, சிறிமா அல்லது சந்திரிகா ஜனாதிபதியாக வழிவிடுவார் என்பதாகும். பின்னர் வெஸ்ட்மினிஸ்டர் நாடாளுமன்ற ஜனநாயகமுறை அறிமுகஞ் செய்யப்படும்.

இதற்குச் சார்பாக சில கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன ஒன்று, விஜேதுங்க பதவி ஆசை பிடித்தவரல்லர். தமக்கு இடைத்த பதவியை வைத்து திருப்தி காணுபவர் அவர்.

*இரண்டாவது நிலைப்பாடு*

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டும் பட்சத்தில் நவம்பருக்கு முந்திய ஜனாதிபதித் தேர்தலை நடத்த விஜேதுங்க உத்தரவிடலாம்.

ஐ. தே. க. சார்பில் தற்போதைய ஜனாதிபதி போட்டியிடலாம். அல்லது வேறு ஒருவர் போட்டிக்கு நிறுத்தப்படலாம்.

*மூன்றாவது நிலைப்பாடு*

விஜேதுங்க தொடர்ந்து ஜனாதிபதியாக தமது பதவிக்காலம் முடிவடையும் வரை இருந்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அமைச்சர்களுடன் அரசாங்கத்தை நடத்த முயற்சிக்கலாம்.

மென்மைப் போக்கு உள்ளவரான விஜேதுங்காவினால் இந்த நடைமுறையை வெற்றிகரமாக சமாளிக்கலாம். இந்த நிலைப்பாட்டை விஜேதுங்கா ஏற்பாராயினால் அரசியல் நெருக்கடி எதுவும் அவருக்கு இடையூறாக இருக்காது. எந்த அமைச்சையும் தமது பொறுப்பில் வைத்திருக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ள ஜனாதிபதியுடன் சேர்ந்து பணிபுரிய வேண்டிய நிர்ப்பந்தம் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஏற்படும்.

ஆனால் விஜேதுங்கா தமது எண்ணத்தை பிரசாரக் கூட்டங்களில் பேசிய போது, பல தடவைகள் வெளிப்படையாகத் தெரிவித்துவிட்டார்.

தில்ஸமாரகமவில் பேசிய போது—

ஓகஸ்ட் 16 ஆம் திகதியுடன் நிறைவேற்று ஜனாதிபதி முறை மறைந்துவிடும் என்று 'படித்த முட்டாள்கள்' எண்ணுகிறார்கள் என்று விஜேதுங்கா தெரிவித்தார்.

இன்னும் ஒருபடி மேலே போய்—

"எனது பதவிக்காலம் 1995 பெப்ரவரி வரை உண்டு யார் வென்றாலும் நான் தான் நாட்டினதும் அரசாங்கத்தினதும் தலைவர். அடுத்த பிரதமரையும் அமைச்சரவையையும் நானே நியமிப்பேன்"— என்று விஜேதுங்க தெரிவித்தார்.

ரத்தோட்டையில் நடந்த இன்னொரு கூட்டத்தில் பேசிய போது—

இதன் அர்த்தம் என்ன? மிகப் பெரும்பான்மையுடன் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டினால், முன்னணியினர் ஜனாதிபதி மாளிகை முன்னர் மக்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்துவர்.

பிலிப்பீன்ஸில் பேர்டினன்ட் மார்கோஸ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பாணியில் இது அமையலாம்.

ஓகஸ்ட் 16இக்குப் பின்னர் இந்த நிலைவரம் ஏற்படலாம்.

அரசமைப்பின்படி பாதுகாப்பு அமைச்சை தனது பொறுப்பில் வைத்துள்ள விஜேதுங்க ஆயுதப்படை பிரதம தளகர்த்தர் என்ற முறையில் தமது அதிகாரங்களை பயன்படுத்த முடியும்.

வீதி ஆர்ப்பாட்டங்களை அடக்க படையினரும் ஐ.தே.க. குண்டர்களும் முற்படும் போது பயங்கர நிலை நாட்டில் ஏற்படும்.

இப்படியான நிலையைத் தவிர்க்க இரு தரப்பினரும் விட்டுக்கொடுத்து செயற்படும் வாய்ப்பு ஏற்பட வேண்டும். தலைவர்களின் அரசியல் முதிர்ச்சி இதற்கு உதவ வேண்டும்.

உண்மையில் "தொங்கு" நாடாளுமன்றம் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் பொன்னான சந்தர்ப்பத்தை விஜேதுங்காவுக்கு வழங்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலையின் பின்னர் விஜேதுங்காவின் உள்ளத்தில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அரும்பியிருந்தது. அது தளைத்து உருவாக 'தொங்கு' நாடாளுமன்றம் சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தக்கூடும்.

கரண்டி என் கையில் உள்ளது. அதனால் எப்படிப் பரிமாறுவது என்பது எனக்குத் தெரியும். கரண்டி என் கையில் இருக்கும் போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எப்படி மக்களுக்கு தாம் நினைத்தவற்றைச் செய்ய முடியும் —"என்றும் விஜேதுங்க தெரிவித்திருக்கிறார். (இ-எ)

## சந்திரிகா பதவிக்கு வந்தால் வட பகுதித் தடைகள் நீங்கும்

### பொ. ஐ. முன்னணிப் பிரமுகர் கூறுகிறார்

கொழும்பு. ஓக. 17

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்தால் வட பகுதி மீதான பொருளாதாரத் தடை, இலாவிலான போக்குவரத்துத் தடை ஆகியவை நீக்கப்பட்டு, மின் விநியோகம் மீண்டும் வழங்கப்படும் என்று, முன்னணியின் தலைமைப் பீடம் உறுதியளித்திருக்கிறது.

முன்னணியின் தலைமைப் பீடம் தமக்கு இந்த உறுதிமொழியை வழங்கியிருப்பதாக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னணி வேட்பாளரான சட்டத்தரணி கி. வி. இராஜரனம் "சண்டே லீடர்" வார இதழுக்குத் தெரிவித்தார்.

இதன் பின்னரே தம்முடன் யாழ். சென்று விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த சந்திரிகா வருவார் என்றும் அவர் கூறினார். (இ-எ)

## சக்தி மிக்க ரஷ்ய தயாரிப்பு; கவச வாகனங்கள் பலாலிக்கு

கொழும்பு, ஓக 17

பலாலியில் இடம் பெற்ற சண்டைகளின் தாக்குதலை அடுத்து வவுனியா மற்றும் பகுதிகளில் இருந்து மேலதிக துருப்புக்கள் பலாலிக்கு நகர்த்தப்பட்டுள்ளதாகவும் —

சக்தி மிக்க ரஷ்ய தயாரிப்பான பி.எம்.பி — 2 ரக புதிய கவச வாகனங்களும் திருகோணமலை ஊடாக பலாலிக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினரின் ஆயுத வலிமையை அதிகரிப்பதற்காக இந்த சக்தி மிக்க ரஷ்ய கவச வாகனங்களை இலங்கை பாதுகாப்பு பகுதியினர் சமீபத்தில் கொள்வனவு செய்திருந்தனர் என்றும் —

அவற்றுள் ஆறு கவச வாகனங்கள் அடங்கிய முதல் தொகுதியே அண்மையில் விமானம் மூலம் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டு ரயில் மார்க்கமாக திருகோணமலைக்கு அனுப்பப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையில் இருந்து இவை பலாலிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அதே சமயம் சில தினங்களுக்கு முன்னர் வவுனியாவில் இருந்து பத்துக்கும் மேற்பட்ட மற்றொரு தொகுதி கவச வாகனங்கள் ரயில் மூலம் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## ஜெய்ப்பூர் நிறுவனத்துக்காக 70 முச்சக்கர வண்டிகள் யாழ். வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்தும் நிறுவனத்திற்கு 70 முச்சக்கர சைக்கிள் வண்டிகள் வந்து சேர்ந்துள்ளன.

ஜெய்ப்பூர் நிறுவனத்தின் கொழும்புத் தலைமை அலுவலகமே இந்த முச்சக்கரவண்டிகளை அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி நிறுவனத்தில் முச்சக்கர வண்டிகள் கோரி விண்ணப்பித்த அங்கவீனமுற்றோருக்கே இவை வழங்கப்படவுள்ளன. (எ-17)

## புலிகளின் குரல் வானொலியில்

**17 — 08 — 1994**

**புதன் இரவு**

- ★ 8-01 — குயிலோசை — "எதிர்காலத் தமிழீழ சிற்பிகள்"
- ★ 8-20 — ஏர்முனை — "நீர்ப்பாவனை" தனி நடிப்பு
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் — "வாழ்விழந்தவள்"

**18 — 08 — 1994**

**வியாழன் காலை**

- ★ 7-02 — மாவீரவணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## விளையாட்டு நிகழ்வு

யாழ். நொட்டறம் கழகம் எஸ். எம். பெர்னாண்டோ நிறுவன ஆதரவில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 90 நிமிட நேர ஆட்டத்தில் பங்கெடுக்கும் எதிர் அராலி அண்ணா விளையாடும் நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும். (க)

## ஆலயங்களில்

சாச்சேரிட்டை கலட்டிப் புலம் ஸ்ரீஞானவைரவர் ஆலயத்தின் சங்காபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெறும். (க-17)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக 17

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனத்துக்குப் பொருத்தமானவர்களைத் தெரிந்தெடுப்பதற்கான எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை செப்டம்பர் மாதம் இரண்டாம் நாள் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வலயம் Iஇல் இடம்பெறும் இவ்வெழுத்துத் தேர்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகிய இடங்களில் இடம்பெறும்.

இந்நியமனத்துக்கு விண்ணப்பித்தோர் தமக்குரிய அனுமதி அட்டைகளை ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் நல்லூர் கல்வித்திணைக்களத்தில் ஆசிரிய நிர்வாகக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ்ப்பாணம் வலயம் - Iஇன் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தெரிவித்துள்ளார். (க)

## பனையிலிருந்து தவறி விழுந்து மரணம்

வடமராட்சி, ஓக. 17

பனை மரத்தில் இருந்து தவறி விழுந்ததினால் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் பின் அங்கு மரணமானார்.

உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த ச. தங்கராசா(வயது 35) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு மரணமானார் (ஐ-173)

## கூட்டுறவுச் சங்க தேர்தல்கள்

வடமராட்சி, ஓக 17

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இளைக்குழுத் தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 27 ஆம் திகதி சனிக்கிழமை சங்கத்தின் 13 கிளைகளிலும் தாக்கல் செய்யப்படவுள்ளன. (எ-173)

## மக்கள் வங்கி கிளைகள்

வடமராட்சி, ஓக. 17

பருத்தித்துறை, சங்கானை மக்கள் வங்கிக் கிளைகள் மிக விரைவில் சொந்த இடங்களிலேயே இயங்கவுள்ளன.

தற்போது பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளை நெல்லியடி மக்கள் வங்கிக் கிளையுடன் நெல்லியடியிலும், சங்கானை மக்கள் வங்கிக்கிளை யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையுடன் யாழ்ப்பாணத்திலும் செயற்பட்டு வருகின்றன.

இம் மாத இறுதிக்குள் மக்கள் வங்கிக்கு ஆட்சேர்ப்பு நடைபெற்று முடிந்ததும் இவ்விரு கிளைகளும் சொந்த இடங்களான பருத்தித்துறை சங்கானையில் இயங்கும். (க-173)

## இந்துசமய வினா-விடை போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 17

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாண இந்துசமயப் பேரவை இந்துசமய வினா-விடைப் போட்டி ஒன்றை நடத்துகிறது. போட்டி பற்றிய விவரங்கள் கடந்த 12ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளிவந்தன.

போட்டி முடிவு திகதி இம்மாதம் 31 ஆம் திகதி ஆகும். (க)

## எதிரணி ஆட்சி 6 மாதங்கள் மட்டுமாம்

கொழும்பு, ஓக. 17

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டி ஆட்சி அமைக்கும் பட்சத்தில் அந்த ஆட்சி ஆறு மாதங்களுக்கு மேல் நிலைக்காது. சுமமாக தாக்குப் பிடிக்காது.

அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி இவ்வாறு தெரிவித்தார். (இ-எ)

## தமிழர் ஈழத்தை அடையும் காலம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது

### 'சண்டே லீட'ருக்கு குமார் பொன்னம்பலம் பேட்டி

கொழும்பு, ஓக. 17

தமிழ் ஈழத்தை அடையும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பெரும்பான்மை இன அரசியல்வாதிகள்தான் இதற்குக் காரணமாகிறார்கள்.

இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார்பொன்னம்பலம் 'சண்டே லீடருக்கு' அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேட்டி வருமாறு:

கேள்வி: நீங்கள் இனவாதி என்று குற்றஞ்சாட்டப்படுகிறதே.

குமார்: நான் இனவாதி என்பதை எப்போதோ ஏற்றுக் கொண்டு விட்டேன். அகராதியின்படி Communalist என்பவன், தனது இனத்தை நேசிப்பவன் என்பதே அர்த்தமாகும். அதன்படி நான் இனவாதியே. ஆனால் நான் இனவெறியன் (Racist) அல்லன். தனது இனம் மற்ற இனத்திலும் பார்க்க உயர்நிலையில் உள்ளது என்று எண்ணிச் செயல்படுபவனே இனவெறியன்.

கேள்வி: இலங்கையன் என்ற (Identity) அடையாளத்தை உருவாக்க உதவவில்லை என்று உங்கள் மீது குற்றஞ்சாட்டப்படுகிறதே.

குமார்: எல்லா இனங்களும் சமத்துவமாக நடத்தப்படும் போது இலங்கையன் என்ற தனித்தன்மை உருவாகிறது. இது சிங்கள தேசம் சிங்கள மரம் என்றெல்லாம் பெரும்பான்மையினர் கூறும்போது தான் எப்படி "இலங்கையன்" என்ற அடையாளத்தை உருவாக்குவது?

தமிழர் முதலில் தம் தனித்தன்மையைப் பேணவேண்டும். அதன் பின்னர் இலங்கையர் என்ற அடையாளத்தை பேண முடியும்.

தமிழர் தம்மை பிறர் மதிக்க வேண்டும் என்று விரும்பினால் முதலில் தம்மைத் தாமே மதிக்கப் பழக வேண்டும்.

தொண்டமான் மலையகத் தமிழரின் தனித்தன்மையைப் பிரதிபலிக்கின்றார்.

அஷ்ரப் முஸ்லிம்களின் தனித்தன்மையைப் பேணுகிறார்.

இலங்கைத் தமிழர் ஏன் தமது தனித்தன்மையைப் பேணக்கூடாது?

தங்கள் சொந்த இனங்களின் தனித்தன்மையைப் பேணுவதாலேயே தொண்டமானும், அஷ்ரபும் மதிக்கப்படுகின்றார்கள்.

ஆனால் இலங்கைத் தமிழர் மத்தியில் இன்னும் அடிமை மனப்பான்மை நிலவுவதால் [illegible] உதைக்கப்படுகின்றார்கள்; தூக்கி எறியப்படுகிறார்கள்.

கேள்வி: வடக்கு- கிழக்குக்கு கடைசியாக எப்போது சென்றீர்?

குமார்: கழுதை வயதுக்கு (Donkey's age) முன்னர் சென்று வந்தேன். வடக்கு - கிழக்குக்கு நான் மட்டுமல்ல, ஆயுதப்படைகளின் பிரதம தளகர்த்தரே அங்கு நெருங்க முடியாத நிலையில் இருக்கிறார்.

கேள்வி: வடக்கு - கிழக்கிலும் பார்க்க கொழும்பு தமிழருக்குப் பாதுகாப்பான இடம்தானே!

குமார்: இல்லை. அப்படி [illegible] முடிக்கொண்டு கட்டிலின்கீழ் படுத்துக்கொள்ளும் தமிழருக்கு கொழும்பு பாதுகாப்பான இடமாக இருக்க முடியும்.

ஆனால் தமிழினத்தின் நலன்களுக்காக நேர்மையுடன் செயல்படும் தமிழனுக்கு கொழும்பு பாதுகாப்பான இடமல்ல.

கேள்வி: திரு. வே. பிரபாகரனுக்கு நீங்கள் அனுப்பும் செய்தி என்ன?

குமார்: அவரின் இராணுவ ரீதியான செயல்பாட்டுக்கு எனது தொப்பியை கழற்றி சிரம் தாழ்த்தி மரியாதை செலுத்துகின்றேன். தமிழர் பிரச்சினைக்கான எத் தீர்வையும் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்புடன் மட்டுமே செயல்படுத்தமுடியும். தீர்வு காணுவதில் விடுதலைப்புலிகள் பங்குபற்றாவிடில் அவர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கப் போவதில்லை. விடுதலைப் புலிகள் ஓரங்கட்டப்பட்டால் [illegible] பெரும் துன்பப்படும். (இ-எ)

நல்லூர் உற்சவகாலச் சிறப்பகம்

## நல்லையின் நாதனே!

நல்லைப் பதியதனில் அமர்ந்திருக்கும் நாதனே
நம்பி வரும் அடியவர்க்கு நலம் கொடுக்கும் —
குகனே
தில்லைப் பதியிலுறை சிவனவனின் மைந்தனே
தெய்வானை வள்ளியரின் அழகு மணவாளனே
தொல்லை செய்த சூரனையே வதைத்த பெரும் —
வீரனே
தேவர்களைச் சிறமீட்டு அபயம் தந்த நாதனே
பொல்லாத வினைகளெல்லாம் போக்கிடுவாய் —
பாலனே
போற்றி புனைத் தொழுகின்றோம் வேலனே!
— நாயன்மார் கட்டு ப. மகேந்திரதாசன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மண்ணில் நற்பெயர் பெற்றது




றோயல் றோஸ்
ரால்கம்பவுடர்

- நறுமணமிக்கது
- சுகாதாரமிக்கது
- புத்துணர்ச்சியானது
- அனைவராலும் விரும்பதக்கது
- விலை மலிவானது

தீபா றோஸ்
ரால்கம்பவுடர்




அழகிய கொள்கலன்களில் அற்புத தயாரிப்பாக விற்பனையிலுள்ளது

றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை.

(சி-8893)



# எடிசன் அக்கடமி

(யாழ் இந்துக்கல்லூரி அருகில்)
411/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## பிரத்தியேக கணித வகுப்பு

## O/L கணிதம்

ஆசிரியர்:
**திரு. B. P. பாஸ்கரன்**

Sat. & Sun. Class — சனி - ஞாயிறு பி.ப. 3 மணி
Evening Class — திங்கள் - வெள்ளி பி.ப. 5 மணி

ஆரம்பம்: **21 - 08 - 1994** ஞாயிறு

★ பாடத்திட்டத்துடன் 18 வருட வினாக்கள் மீட்கப்படும்.

(இ-8886)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சோமசுந்தரம் சுந்தரம்மா

காரைநகர், களபூமி திக்கரையைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் சுந்தரம்மா காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இ. போ. ச. நடத்துநர் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், சரஸ்வதி, தனலட்சுமி, சிவபாக்கியம் [ஆசிரியை புளியங்குளம் மகாவித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னம்பலவாணர் [தபால் அலுவலகம், காரைநகர்] நடராசா, (சிவப்ஸ் கொழும்பு) நித்தியானந்தன் (வர்த்தக நிலையம் நொச்சியாகம) ஆகியோரின் அன்பு மாமியாரும், லோகநாதன் (லண்டன்), லோசராணி, ரஞ்சினி, நந்தினி, வனஜா, வதனா, ஸ்ரீஸ்கந்தவேல், சுகிர்தா, சித்திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 15-8-94 அன்று புளியங்குளத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. பொன்னம்பலவாணர்

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

(32434)

## வைத்திலிங்கம் சபாரெத்தினம்

புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் சபாரெத்தினம் புங்குடுதீவில் காலமானார். இவர் முன்னாள் இரத்தினபுரி அம்பாள் ஸ்ரோஸ் உரிமையாளரும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்பு கணவரும், தவமணி, இராஜேஸ்வரி, பாலாம்பிகை, யோகாம்பிகை, சந்திரலேகா ஆகியோரின் அன்பு தகப்பனாரும், சதாசிவம், நந்தகுமார், சுப்பிரமணியம், விநாயகமூர்த்தி சத்தியசீலன் ஆகியோரின் மாமனாரும் ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திரு. சுப்பிரமணியம் (C.T.B.)
திருமதி சு. பாலாம்பிகை (மகள்)

கலைவாணி வீதி,
கோண்டாவில்.

(32423)

## குற்றாலிங்கம் மாணிக்கம்

(நாதஸ்வர வித்துவான்)

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த குற்றாலிங்கம் மாணிக்கம் 14 - 08 - 94 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 15 - 08 - 94 இல் நடைபெற்று, தனங்கிளப்பை கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றன. உற்றார், உறவினர், இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி ச. மாணிக்கம்
(மனைவி)
பிள்ளைகள்

(32437)

# பதுங்கு குழிக்குள் இறங்கு முன் மனைவி, மகன் ஷெல்லுக்கு பலி

## மூவரைப் பறிகொடுத்த பத்தமேனி வாசிக்கு நேர்ந்த அவலம்

யாழ்ப்பாணம், ஓக. 17

''பதுங்குகுழிக்குள் நாம் நுழைந்து கொண்டிருந்த போது ஷெல் அருகில் விழுந்தது. எனது மனைவியும் மூத்த மகனும் பதுங்கு குழிக்குள் இறங்குவதற்கு முன்பே அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.''

—இவ்வாறு கண்ணீர் மல்கக் கூறினார் முருகன் தேசிங்கம் (வயது 50).

நேற்று அச்சுவேலி பத்தமேனி வெள்ளவாய்க்கால் பகுதியில் விழுந்த ஷெல்லினால் தனது மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் பறிகொடுத்த அவர் தமக்கு நேர்ந்த அவலத்தை உதயன் செய்தியாளரிடம் விவரித்தார். அவர் கூறியதாவது:-

அதிகாலை 1.30 மணிமுதல் கடும் ஷெல் தாக்குதல் இடம்பெற்றதால் நித்திரையின்றி விழித்திருந்த நான், காலை 5 30 மணிக்கு மனைவியை எழுப்பி தேநீர் தயாரிக்கச் சொல்லிவிட்டு காலைக் கடன் முடித்து அருகில் இருந்த கோயிலுக்குச் சென்றேன்.

சுமார் 6.30 மணிக்கு வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, குசினியில் எல்லோரும் தேநீர் பருகிக்கொண்டிருந்தனர். அவர்களுடன் சேர்ந்து நானும் தேநீர் குடித்துக் கொண்டிருந்தேன்.

எமது வீட்டுக்கு அண்மையில் வல்லைப் பகுதியில் விழுந்து கொண்டிருந்த ஷெல்கள் திடீரென இடம்மாறி எமது வீட்டுக்கு அருகில் தோட்டத்திலும் விழுந்தன.

அதனால் அச்சமுற்ற நான் குடும்பத்தவரையும் கூட்டிக்கொண்டு பதுங்குகுழியை நோக்கி ஓடினேன். நானும் எனது இளைய மகனும் பதுங்குகுழிக்குள் நுழைந்த வேளை — தொடர்ந்து வந்த ஏனையோர் பதுங்குகுழிக்குள் இறங்க முன்னர்—

அவர்களுக்கு அருகில் ஷெல் விழுந்து வெடித்தது.

பதுங்குகுழியை விட்டு வெளியே வந்த நான் எனது மனைவியும் மூத்த மகனும் அந்த இடத்தில் பேச்சு மூச்சின்றி இரத்த வெள்ளத்தில் கிடந்ததைக் கண்டேன்.

இளையமகன் ''அப்பா'' என்று முனகியபடி இருந்தார்.

அனைவரையும் வாகனம் ஒன்றில் ஏற்றிக்கொண்டு யாழ். ஆஸ்பத்திரி நோக்கி விரைந்தேன் எனது இளைய மகனும் வழியில் எனது மடியில் உயிர் துறந்தான் —இவ்வாறு கண்ணீர் மல்க அவர் கூறினார். (உ-15)

## தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரி மரணம்

கொழும்பு, ஓக. 17

தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த சிரேஷ்ட அரசு அதிகாரி ஒருவர் வாக்களிப்பு நிலையத்தில் மாரடைப்பு காரணமாக மரணமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அம்பாந்தோட்டை மாவட்டம்— புததியகம என்னுமிடத்தில் இருந்த வாக்களிப்பு நிலையத்தில் இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. அந்த அதிகாரியின் பெயர் திரு. இரத்தினாயக்கா. [ஓ-எ-6]

## விமானப்படை பவுசர் மோதி தமிழ்ப்பெண் பலி

கொழும்பு, ஓக. 17

மட்டக்களப்பு நகரில் கடந்த வியாழக்கிழமை விமானப் படையினரின் பவுசர் ஒன்று மோதியதில் தமிழ் கர்ப்பிணிப் பெண் ஒருவர் கொல்லப்பட்டார்.

கல்லடியைச் சேர்ந்த ஆரியரத்தினம் பாரிவதி (42 வயது) தனது கணவருடன் வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருந்த சமயமே கோவிந்தன் வீதி, புதியபாலச் சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றது. [ஓ-3]

## இரவில் பறந்து திரிந்த விமானங்கள்

யாழ்ப்பாணம், ஓக 17

பலாலி படை முகாமைச் சூழவுள்ள பிரதேசத்தை நேற்று அதிகாலை 2 மணி முதல் சுமார் இரண்டு மணி நேரம் இரு குண்டு வீச்சு விமானங்கள் வட்டமிட்டன. ஹெலிக்கொப்டர் ஒன்றும் அவ்வேளை வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்தது. (உ-4-17)

## பாரிய கடற்படை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பலகோடி ரூபா பெறுமதியான நவீன ராடர்களும் மற்றும் தொழில்நுட்ப சாதனங்களும் இக்கப்பலில் பொருத்தப்பட்டிருந்தன.

இக்கப்பலினதும் 'டோறா' படகினதும் அழிப்பு கடற்படைக்கு பேரிழப்பு எனத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது இரண்டு கடற்படைச் சிப்பாய்கள் காணமற் போனதாக பி.பி.ஸி தெரிவித்தது.

அழிக்கப்பட்ட தாய்க்கப்பல் நானூறு தொன் எடையுடையது என இந்திய வானொலியும் —

நாலாயிரம் தொன் எடையுடையது என 'லேபீர்தாஸ்' வானொலியின் சிங்கள சேவையிலும் தெரிவிக்கப்பட்டது.


# A/L 95 & 96

பொருளியல்
Mr. அ. ராஜேஸ்வரன்
அளவையியல்
Mr. சர்மா
தமிழ்
Mr. தாஸ்
இந்துநாகரிகம்
Mr. சிறி
கிறிஸ்தவம்
Mrs A. மல்லிகா

**SHAMROCK**
யாழ். சுண்டுக்குளி
(32432)


# 'சுப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ்' தாண்டிக்குளம் ரயில் சேவை

## 22 ஆம் திகதி முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஓக. 17

கொழும்பு—தாண்டிக்குளம் வரையிலான 'சுப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ்' ரயில் சேவை எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது

பொல்காவலை, அனுராதபுரம் ரயில் நிலையங்களில் 5 நிமிடமே தரித்து நிற்கும் இந்த ரயில் 300-350 ஆசனங்களைக் கொண்டிருக்கும்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து திங்கள், வெள்ளிக்கிழமை தினங்களில் இரவு 10 மணிக்கு புறப்படும் இந்த ரயில் அதிகாலை 3.30 மணிக்கு வவுனியாவைச் சென்றடைந்து பின்னர் 5 மணிக்கு தாண்டிக்குளத்தை அடையும்.

புதன்கிழமைகளில் அதிகாலை 5 மணிக்கு கோட்டையிலிருந்து புறப்படும் இந்த ரயில் காலை 9.30 மணிக்கு தாண்டிக்குளத்தைச் சென்றடையும்.

வவுனியாவிலிருந்து செவ்வாய், புதன், சனிக்கிழமை தினங்களில் மாலை 4 மணிக்கு புறப்பட்டு இரவு 8 30 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தை அடையும்.

குளிரூட்டப்பட்ட ஆசனங்களுக்கான கட்டணம் 300 ரூபா. இருக்கை ஆசனங்களுக்கு மட்டுமே பிரயாணிகளுக்கு டிக்கட் வழங்கப்படும்.

பிரயாணிகள் பத்து நாட்களுக்கு முன்பிருந்தே ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளலாம். (ஓ-4)

## ஒரே......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 50) அவரது பேர்த்தியான தவராசா ராகினி (ஆஷா —வயது 9) ஆகியோரும் பலியாகினர்.

இவர்களில் தவராசா ராகினி ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு அங்கு மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் தவராசா இராசாபதி (வயது 6) என்ற சிறுமியும் மற்றும் சிவலை செல்லையா (வயது 50), அவரது மனைவி செல்லையா சந்திரா (வயது 42), இ. செல்வர் (வயது 48) ஆகியோரும் காயமுற்றனர்.

காலை 6 மணியளவில் வல்லைவெளி முனியப்பர் ஆலயத்திற்கு அண்மையில் விழுந்த ஷெல்லினால் அப்பகுதியூடாக சைக்கிளில் வாழைக்குலை கட்டிச் சென்ற வல்லிபுரம் ஐயாத்துரை (வயது 50) என்ற எட்டுப் பிள்ளைகளின் தந்தை — உயிரிழந்தார் இவர் கதிரிப்பாயில் இருந்து இடம்பெயர்ந்து அச்சுவேலியில் வசித்து வந்தவர் என்றும் —

தொழில் இழந்த நிலையில் அச்சுவேலியிலிருந்து மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்து, எடுத்துச் சென்று நெல்லியடிச் சந்தையில் விற்பனை செய்து வருபவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பலாலியிலிருந்து ஏவப்பட்ட பல ஷெல்கள் தொண்டமானாறு, வல்வெட்டித்துறை பகுதியிலும் விழுந்து வெடித்தன.

ஊரிக்காடு திருவத்தம்பை என்ற இடத்தில் வீழ்ந்த ஷெல்லினால் தர்மராஜா லீலாவதி (வயது 35) என்பவர் காயமுற்றார். வீடு ஒன்று சேதமுற்றது

பொலிகண்டி, வல்வெட்டித்துறை - ஆலடி ஒழுங்கை ஆதிகோயிலடி, அம்பர்மலை ஆகிய பகுதியிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இந்த ஷெல் தாக்குதல்களினால் அச்சுவேலி, புத்தூர், நவக்கிரி மற்றும் வாதரவத்தைச் சேர்ந்த மக்கள் இரவோடு இரவாக இடம்பெயர்ந்தனர். இப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது

கடந்த சனியன்றும் இப்பகுதிகள் மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் மொத்தம் ஒன்பது பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-4-11-13-15-17-155-173)

## குற்றாலீஸ்வரன் மீண்டும் சாதனை

தமிழகத்தைச் சேர்ந்த குற்றாலீஸ்வரன் என்ற சிறுவன் ஆங்கிலக் கால்வாயை 11 மணித்தியாலம் 46 நிமிடங்களில் நீந்திக் கடந்ததாக அறிவிக்கப்படுகிறது

இச்சிறுவன் ராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையில் வங்காள விரிகுடாவை நீந்திக் கடந்து சாதனை புரிந்தவர் என்பது தெரிந்ததே. (உ-எ)

## நோயாளர் நலன்புரி உணவகம்

வடமராட்சி, ஓக 17

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நலன் புரிச்சங்க உணவகம் இன்று புதன்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது. (உ-173)

## முன்னேஸ்வரம் கோயில் உற்சவம்

கொழும்பு. ஓக 17

சிலாபம் முன்னேஸ்வரர் கோயில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தேர்த்திருவிழா அடுத்த மாதம் 18 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா மறுநாளும் இடம்பெறும்.

கடந்த மாதம் ஆரம்பமாகியிருக்க வேண்டிய இந்த மஹோற்சவம் பொதுத் தேர்தலை ஒட்டி ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

## நாவலர் பற்றிய பிரசுரம்

யாழ்ப்பாணம், ஓக 17

ஆறுமுகநாவலர் பற்றிய பல தகவல்களைக் கொண்டதொரு பிரசுரத்தை 'மில்க் வைற்' தொழிலகம் வெளியிட்டுள்ளது. இதனை நேரில் அல்லது தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. (க)

## குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக 17

யாழ். கன்னாபுரம் குடியேற்றப்பகுதி மக்களுக்கு யாழ் மாநகரசபை தாங்கி மூலம் குடிநீரை விநியோகித்து வருகிறது.

இப்பகுதி மக்களுக்கு இதுவரை காலமும் நிலவி வந்த குடிநீர் தட்டுப்பாடு இதன் மூலம் நீங்கியிருப்பதாக யாழ். மாநகர பொறியியலாளர் திரு. . தவராஜா தெரிவித்தார். (எ-17)

# ஆனையிறவு முகாம்பகுதியில் ஷெல்வீச்சு, வேட்டுச் சத்தம்!

## பச்சிலைப்பள்ளியில் பதற்றநிலை

தென்மராட்சி, ஓக. 17

கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு 11.30 மணி தொடக்கம் நேற்று செவ்வாய் அதிகாலை 3 30 மணிவரை ஆனையிறவு முகாம் பகுதியில் ஷெல் வீச்சும், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் தொடர்ச்சியாக கேட்டபடி இருந்தன.

பூநகரிப் பகுதி முகாமில் இருந்தும் கிளாலிப் பகுதியை நோக்கியும் பரந்தன் பக்கமாகவும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இரவு முழுவதும் இரு ஹெலிகள் பலாலிக்கும் ஆனையிறவுக்கும் இடையில் பறந்தபடி இருந்தன. இதனால் பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் பதற்றநிலை காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ 117)

# 120 ஆசனங்கள் கிடைக்கும் என்கிறார் சு. க. செயலர்

120 ஆசனங்களை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, கைப்பற்றும் என்று சு. க. பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா நேற்றிரவு தேர்தல் முடிவுகள் வெளியாக முன்னர் பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

நேற்று இருந்த நிலைவரப்படி இந்த எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்பு உண்டு தேசியப்பட்டியல் எம் பிக்களையும் சேர்த்தால் புதிய நாடாளுமன்றத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையை நெருங்கும் என்றும் அவர் கூறினார். (உ-எ-6)

# தபால் வாக்களிப்பு முடிவுகள் வருமாறு

நேற்று நள்ளிரவு வெளியான — தபால் மூல வாக்களிப்பு—முடிவுகள் வருமாறு:-

மொனறாகலை மாவட்டம்

| | | |
|---|---|---|
| பொ. ஐ. மு. | — | 1,961 |
| ஐ. தே. க. | — | 1,487 |
| சுயே. 4 | — | 53 |
| மு. முன்னணி | — | 43 |
| சுயே. 1 | — | 02 |
| சுயே. 5 | — | 01 |

பொலன்னறுவை மாவட்டம்

| | | |
|---|---|---|
| பொ. ஐ. மு. | — | 2,110 |
| ஐ. தே. க. | — | 1,504 |
| மு. முன்னணி | — | 65 |

மாத்தறை மாவட்டம்

| | | |
|---|---|---|
| பொ. ஐ. மு. | — | 4,973 |
| ஐ. தே. க. | — | 2,155 |
| மு. முன்னணி | — | 169 |
| ம. ஐ. மு. | — | 51 |

கண்டி மாவட்டம்

| | | |
|---|---|---|
| பொ. ஐ. மு. | — | 9,193 |
| ஐ. தே. க. | — | 7,345 |
| ம. ஐ. மு. | — | 187 |
| மு. முன்னணி | — | 122 |
| சுயே. 1 | — | 04 |
| சுயே. 2 | — | 03 |

வன்னி மாவட்டம்

| | | |
|---|---|---|
| பொ. ஐ. மு. | — | 165 |
| த. வி. கூ. | — | 148 |
| ஐ. தே. க. | — | 117 |
| ஈ.பி.ஆர்.எல்.எவ். | — | 106 |
| ஸ்ரீ. மு. கா. | — | 39 |
| ஜ. ம. வி. மு. | — | 71 |
| சுயே. 1 | — | 26 |
| சுயே. 2 | — | 12 |
| சுயே. 3 | — | 02 |

## மிரட்டல் காரணமாக இடம்பெயர்ந்த அகதிகள் வாக்களிக்க பின்னடிப்பு

யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் வசித்த அகதிகள் மிரட்டப்பட்டதால் வாக்களிக்கச் செல்லவில்லை என பி. பி. ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி தொகுதிகளைச் சேர்ந்த — இடம்பெயர்ந்த — 46 அகதிகள் வாக்களிப்பதற்காக கொழும்பு கொட்டாஞ்சேனையில் வாக்களிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

ஆனால் நேற்று பிற்பகல் 2 30 மணிவரை அங்கு இருவரே வாக்களித்திருந்தனர் மிரட்டல் காரணமாக எஞ்சியோர் வாக்களிக்கச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது (உ-3)

# பலாலி முகாமை தாக்கிய புலிகளின் நோக்கம் என்ன?

## அதிகாரிகள் பலதரப்பட்ட கருத்து

கொழும்பு, ஓக. 17

பலாலி விமானத்தளம் மீது அண்மையில் கரும்புலிகள் நடத்திய தாக்குதல் குறித்து விமானப்படை வட்டாரங்களில் பல விதமான கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

பலாலி விமானத் தளத்தின் ஓடுபாதையில் நிறுத்தப்பட்டிருக்கும் படை விமானங்களையும் தொலைத் தொடர்பு கோபுரத்தையும் தாக்கி அழித்துவிட்டு, ஹெலிக்கொப்டர் ஒன்றை பலவந்தமாக எடுத்து அதில் பறந்து செல்வதே கரும்புலிகளின் திட்டமாக இருந்திருக்கலாம் என்ற ஒரு கருத்து விமானப்படை அதிகாரிகள் மத்தியில் நிலவுவதாக சண்டே ஐலண்ட் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

எனினும் அப்படியான தாக்குதலை நடத்தும் திறமையை விடுதலைப்புலிகள் பெற்றிருக்கவில்லை என்று சிலரால் தெரிவிக்கப்பட்டது.

அப்படியான திறமையை விடுதலைப்புலிகள் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று வேறு சில அதிகாரிகள் கருதுகின்றனர்.

ஹெலிக்கொப்டர் ஒன்றைச் செலுத்துவதற்கு ஐந்து பறக்கும் மணித்தியாலங்கள் பயிற்சிபெற்றால் போதுமானது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (இ-எ)

# உற்பத்திப் பொருள்களின் லேபலில் முழு விவரமும்

கல்வியன்காடு. ஓக 16

மென்பானங்கள், ஜாம் போன்றவற்றைத் தயாரிக்கும் உற்பத்தி நிறுவனங்கள், அவற்றின் லேபலில் அவற்றைத் தயாரிக்கும் நிறுவனத்தின் பெயர், முகவரி ஆகியவற்றை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் உற்பத்தி செய்யப்பட்ட திகதி, முடிவடையும் திகதி, அவற்றில் சேர்க்கப்பட்ட மூலப் பொருள்கள் போன்ற விவரங்களையும் தெரிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்கள் கலந்து கொண்ட சந்திப்பு ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

# 400 தொன் விதை கிழங்கு

யாழ் மாவட்ட விவசாய திணைக்களம் இவ்வாண்டு காலபோக செய்கைக்கென 400 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கை கொழும்பில் இருந்து எடுத்துவர நடவடிக்கை எடுத்துள்ளது.

''டினாசறி'' என்ற இனத்தை சேர்ந்த விதை உருளைக்கிழங்கே இம்முறை எடுத்து வரப்படவுள்ளது.

சென்ற ஆண்டு 155 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு யாழ் மாவட்டத்துக்கு கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டது. (ச-17)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் ... யாழ்ப்பாணம், ... வீதி, 361/5, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17 - 08 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org